**DEPOSITION OF WITNESS**
**Chapter XXIII Code of Criminal Procedure**
**IN THE COURT OF SESSIONS JUDGE**
**TIRUVARUR**
**Sessions Case No.140/2025**

**Deposition of Witness for Prosecution PW 1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | வீரசேகரன் | Father's Name | : | மருதமுத்து |
| Village | : | வடபாதிமங்கலம் | Taluk | : | கூத்தாநல்லூர் |
| Calling | : | | Age | : | 55 |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1878, 22nd day of January 2026.**

**(A1 , A2 are present. A4 died. A3 absent. For A3 petition U/s. 355 BNSS is filed and allowed).**

**முதல் விசாரணை**

நான் தற்போது வடபாதிமங்கலம் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 18.05.2017 அன்று நள்ளிரவு 1.00 மணியளவில் திருவாரூர் தாலுகா காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணியிலிருந்தபோது நான், முதல்நிலை காவலர் 389 கவியழகன், FOP பிரகாஷ் ஆகியோரும் மோட்டார் சைக்கிளில் ரோந்து பணிக்கு சென்றபோது திருவாரூர் விளமல்

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.01.22 15:14:14 +0530

கூட்டுறவு நகர் ஆர்ச் எதிரே மன்னார்குடியிலிருந்து TN 10 K 5943 என்ற பதிவெண் கொண்ட டாடா இன்டிகா கார் வேகமாக வந்து கொண்டிருந்ததை மறைக்கும்போது எங்களை மோதுவதுபோல் வந்து வேகமாக சென்றது. இது தொடர்பாக வாக்கி டாக்கி மூலம் Control Room ற்கு தகவல் சொல்லிவிட்டு அந்த காரை பின்தொடர்ந்து நாங்கள் மூவரும் காரை விரட்டி சென்றோம். அந்த கார் மயிலாடுதுறை ரோட்டில் வேகமாக சென்று கொண்டிருந்தது. இந்த தகவலை நன்னிலம் காவல் நிலையத்திற்கு சொல்லி சன்னாநல்லூரில் நன்னிலம் போலீசார் நின்று Parry கார்ட் வைத்து மறைத்தார்கள். மீண்டும் காரை ஓட்டிவந்தவர்கள் காரை திருப்பிக்கொண்டு திருவாரூர் நோக்கி வந்ததாக நன்னிலம் போலீசார் எங்களுக்கு வாக்கி டாக்கி மூலம் தகவல் சொன்னதால் சன்னாநல்லூர் பாலம் அருகே நாங்கள் நின்று வேகமாக வந்த காரை மறைத்தோம். அந்த கார் அதி வேகமாக வந்து எங்களை மோதிவிட்டு தப்பி செல்ல முயற்சி செய்தார்கள். அப்போது நாங்கள் நிறுத்தி வைத்திருந்த மோட்டார் சைக்கிள் மீது மோதி சேதப்படுத்தி விட்டு அருகிலிருந்த வாகை மரத்தின்மீது கார் மோதி நின்றது. உடனே சம்பவ இடத்திற்கு நன்னிலம் காவலர் சீனிவாசனும் FOP வீனசும் அங்கு வரவே அவர்களுடன் நாங்களும் சேர்ந்து காரில் இருந்தவர்களை பிடித்து விசாரித்தபோது காரில் இருந்தவர்கள்

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.01.22 15:14:20 +0530

அவர்கள் தங்கள் பெயர் செந்தாமரை, இந்திரஜித், அம்மாசி, கருப்பையா மகன் ஜோதிராஜா என தெரிவித்தார்கள். அதில் இந்திரஜித் என்பவர் திருவாரூர் பள்ளிவாரமங்கலத்தை சேர்ந்தவர் என தெரிந்து கொண்டோம். அவர்கள் வந்த டாடா இன்டிகா கார் செந்தாமரைக்கு சொந்தமானது எனவும் சொன்னார்கள். காரில் வந்தவர்களுக்கு காயம்பட்டதால் 108 ஆம்புலன்சிற்கு தகவல் சொல்லி திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் உள்நோயாளியாக சேர்த்தோம். நாங்கள் ஒதுங்கி நிற்காவிட்டால் காரில் வேகமாக வந்தவர்கள் எங்கள் மீது காரை மோதி எங்களை கொன்றிருப்பார்கள். மேற்படி எதிரிகளை திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்துவிட்டு திருவாரூர் தாலுகா காவல் நிலையத்தில் நான் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் எழுத்து பூர்வமான புகார் நான் கொடுத்ததுதான். அந்த புகார் **அ.சா.ஆ.1**. ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**குறுக்கு விசாரணை**

எங்களுடன் உதவி ஆய்வாளர் கபிலன் இந்த பணிக்கு வரவில்லை. நாங்கள் சம்மந்தப்பட்ட வாகனத்தை கூட்டுறவு நகரிலிருந்து மயிலாடுதுறை ரோடு வரை துரத்தி செல்லும்போது உதவி ஆய்வாளர் வரவில்லை. அ.சா.ஆ.1 யை திருவாரூர் தாலுகா காவல்

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.01.22 15:14:27 +0530

நிலையத்தில் பகல் 11.00 மணிக்கு என் கைப்பட எழுதியது. என்னுடைய 35 ஆண்டு கால பணியில் பல வருடங்கள் நீதிமன்ற காவலராக பணிபுரிந்த அனுபவம் உண்டு என்றால் சரி. சன்னாநல்லூரில் எத்தனை மணிக்கு சம்பவம் என அ.சா.ஆ.1ல் நான் எழுதவில்லை என்றால் சரி. இந்த வழக்கில் ஒரு இருசக்கர வாகனம் சேதப்படுத்தப்பட்டதாக சொல்வது உதவி ஆய்வாளர் கபிலனுடைய வாகனம் என்றால் ஆமாம். என்னுடைய வாகனம் பஞ்சராகி விட்டபடியால் அவருடைய வாகனத்தை என் பயன்பாட்டிற்காக நான் வாங்கி சென்றேன். சேதமடைந்த இருசக்கர வாகனத்தில் முன்பக்க வீல், மெர்கார்ட் லைட்டாக சேதமடைந்துவிட்டது. இருசக்கர வாகனமும் காரும் மோட்டார் வாகன ஆய்வாளரின் பரிசோதனைக்கு சென்றதா என்று எனக்கு தெரியாது. விளமல் கூட்டுறவு நகரிலிருந்து மாயவரம்-சன்னாநல்லூர் பிரதான சாலையில் CCTV Camera பொறுத்தப்பட்டிருந்ததா என்றால் இல்லை. கூட்டுறவு நகரிலிருந்து விளமல் சென்று விளமலிலிருந்து திருக்கண்ணமங்கை வழியாக சென்று மத்திய பல்கலைக்கழகம் கங்களாஞ்சேரி பாலம் வழியாக மயிலாடுதுரை சென்றது. நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ளவாறு நாங்கள் வாக்கி டாக்கியில் தகவல் தந்தவாறு நன்னிலம் போலீசார் எதிரிகள் வந்த காரை Parry Guard வைத்து மறைத்ததாகவும் அவர்கள் திருவாரூர் ரோட்டில் திரும்பி

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.01.22 15:14:32 +0530

வருவதாகவும் நீங்களும் மறைங்கள் என நன்னிலம் போலீசார் வாக்கி டாக்கியில் சொன்னதை நான் அ.சா.ஆ.1ல் எழுதவில்லை என்றால் சரி. வாகை மரத்தில் கார் மோதும் போது நள்ளிரவு சுமார் 2.00 மணியிருக்கும். சம்பவ இடத்தில் இந்திரஜித், அம்மாசி ஆகியோர் காரை விட்டு ஓடும்போது அவர்களை துரத்தி பக்கத்திலேயே பிடித்து விட்டோம். இருவரையும் பிடித்து காருக்கருகே உட்கார வைத்தோம். சம்பவத்தன்று காலை 8.00 மணிக்கு காவல் நிலையம் வந்தோம். காவல் நிலைய பொது நாட்குறிப்பில் காலை 8.00 மணிக்கு வந்தபோது காவல் துறையினர் பதிவு செய்யவில்லை, உயரதிகாரிகளுக்கு தகவலை வாய்மொழியாக தெரியப்படுத்தினோம். 11.00 மணிக்கு அ.சா.ஆ.1 எழுதப்படவில்லை எனவும் 19.05.2017 அன்று காவல் நிலையத்தில் வைத்து ஒரு பொய் புகார் எழுதப்பட்டது எனவும் நான் சொல்வதுபோல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை எனவும் சொன்னால் தவறு. எதிரிகள் இந்திரஜித், அம்மாசி ஆகியோரை சம்பவத்திற்கு முன்பு நான் பார்த்ததில்லை, அவர்களை பற்றி எனக்கு எதுவும் தெரியாது. நான் சொல்வதுபோல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை எனவும் எதிரிகள் முன் குற்றவாளிகள் எனவும் அவர்கள் காரைக்கால் சென்றுவிட்டு சம்மந்தப்பட்ட ரோட்டில் வரும்போது நாய் குறுக்கே போனதால் ரோட்டை விட்டு விலகி

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.01.22 15:14:39 +0530

அருகிலிருந்த வாகை மரத்தின் மீது மோதி விபத்து ஏற்பட்டுவிட்டது எனவும் விபத்தில் உள்ள முன் குற்றவாளிகளை பிடித்து 307 வது பிரிவு வருவதுபோல் ஒரு பொய் வழக்கு காவல் துறையால் உருவாக்கப்பட்டது எனவும் அதற்கு ஆதரவாக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் எனவும் அதனால்தான் எந்த வாகனத்தையும் மோட்டார் வாகன ஆய்விற்கு உட்படுத்தவில்லை எனவும் சொன்னால் தவறு.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

SELVA MUTHU KUMARI

Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.01.22 15:14:45 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,

திருவாரூர்.

**DEPOSITION OF WITNESS**

**Chapter XXIII Code of Criminal Procedure**

**IN THE COURT OF SESSIONS JUDGE**

**TIRUVARUR**

**Sessions Case No.140/2025**

**Deposition of Witness for Prosecution PW 2**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | அசோகன் | Father's Name | : | கிருஷ்ணன் |
| Village | : | விளமல் | Taluk | : | திருவாரூர் |
| Calling | : | | Age | : | 56 |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1878, 22nd day of January 2026.**

**(A1 , A2 are present. A4 died. A3 absent. For A3 petition U/s. 355 BNSS is filed and allowed).**

**முதல் விசாரணை**

நான் தற்போது திருவாரூர் விளமலில் வசித்து வருகிறேன். நான் ஆயுதப்படை அருகில் ராஜாமணி என்ற பெயரில் ஹோட்டல் வைத்துள்ளேன். கடந்த 18.05.2017 ம் தேதி காலை 11.40 மணிக்கு நானும் சிவராமன் என்பவரும் திருவாரூர் செல்லும் போது விளமல் கூட்டுறவு நகர் ஆர்ச் எதிரே போலீசார் கார் உரசி சென்ற இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் பார்வை மகஜர் தயார் செய்தார்கள். என்னிடம்

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.01.22 15:14:53 +0530

காட்டப்படும் பார்வை மகஜரில் நான் முதல் சாட்சியாகவும் சிவராமன் 2 வது சாட்சியாகவும் கையெழுத்து போட்டோம். அந்த பார்வை மகஜர் **அ.சா.ஆ.2**. ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**குறுக்கு விசாரணை**

திருவாரூர் ஆயுதப்படை மைதானத்தின் அருகில் உள்ள ஹோட்டலை நான்தான் நடத்தி வருகிறேன். என் கடைக்கு வரும் காவல் துறையினர் பெரும்பாலானோர் ஆயுதப்படை காவலர்கள் என்றால் சரி. நான் சம்பவ இடத்தில் கையெழுத்து போடவில்லை எனவும் காவல் நிலையத்தில் என்னை வரவைத்து காவலர்கள் எனக்கு தெரிந்தவர்கள் என்பதால் என்னிடம் கையொப்பம் வாங்கி கொண்டார்கள் என்றால் தவறு. திருவாரூர் கூட்டுறவு நகரிலிருந்து விளமல் வரை பல கடைகள் வீடுகள் உள்ளன என்றால் சரி. பல இடங்களில் CCTV Camera க்கள் பொறுத்தப்பட்டுள்ளன என்றால் சரி.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

SELVA MUTHU KUMARI

Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.01.22 15:14:59 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,

திருவாரூர்.